



# தினப்புயல்

THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 40

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் விடுத்துள்ள கோரிக்கை

எந்தவிதமான எழுத்து மூலமான ஆவணங்களின்றி உங்கள் பாடசாலையின் திறப்புகளை அதிபர்கள் கையளிக்க வேண்டாமென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் கோரிக்கை விடுத்தார். நேற்று (21) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஆரம்பப் பாடசாலைகளை இலங்கை முழுவதுமாக ஆரம்பிப்பதாக அரசாங்கம் அறிவித்திருந்த நிலையில் ஆசிரியர்-அதிபர் தொழிற்சங்க கூட்டமைப்பு சம்பள முரண்பாட்டுப் பிரச்சினை தீர்க்கப்படாததாலேயே தொடர்ச்சியாக இரு நாட்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதாக அறிவித்திருந்தோம். 25 ஆம் திகதி கற்பித்தலை ஆரம்பிப்போம். அந்த வகையில் இன்றைய தினமும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கின்றோம். (02)

## ஏற்றுமதி பயிர்களின் சந்தை விலைகளில் மாற்றம்



கருவா, மிளகு, சாதிக்காய், கராம்பு மற்றும் கோப்பி உள்ளிட்ட பல ஏற்றுமதி பயிர்களின் சந்தை விலை உயர்ந்துள்ளது.

இந்த ஆண்டு செப்டெம்பர் 30 ஆம் திகதி வரை மசாலாப் பொருட்கள் ஏற்றுமதியின் ஊடாக இலங்கை 350 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்டியுள்ளதாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (02)

## "கிரே" பட்டியலில் தொடரும் பாகிஸ்தான்

பயங்கரவாதத்துக்கு நிதி உதவி பண மோசடி தொடர்பாக "கிரே" எனப்படும் மோசமான நாடுகள் பட்டியலில் பாகிஸ்தான் தொடர்ந்து இடம் பெறும் என தகவல் வெளியாகியுள்ளது.




பிரான்சின் பாரிசை தலைமையிடமாக வைத்து செயல்படும் எப்.ஏ.டி.எப். அமைப்பு சர்வதேச அளவில் பயங்கரவாதத்துக்கு நிதி கிடைப்பதை தடுக்கவும் பண மோசடிகளை தடுக்கவும் அந்தந்த நாடுகள் எடுக்கும் நடவடிக்கைகளின் அடிப்படையில் பட்டியலை வெளியிட்டு வருகிறது. (02)

## ஓமனை வீழ்த்தி சூப்பர் 12 சுற்றுக்கு முன்னேறியது ஸ்கொட்லாந்து




20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் தொடரின் முதல் சுற்று போட்டியில் நேற்று "பி" பிரிவில் இடம் பிடித்துள்ள ஓமன், ஸ்கொட்லாந்து அணிகள் மோதின. டொஸ் வென்ற ஓமன் அணி முதலில் பெட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் பெட் செய்த ஓமன் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 122 ரன்னுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அதிகபட்சமாக லியாஸ் 37, மகூத் 34 ரன்னும் எடுத்தனர். ஸ்கொட்லாந்து சார்பில் டேவி 3 விக்கெட், ஷ்ரீப், லீஸ்க் தலா விக்கெட்டுகள் வீழ்த்தினர். (02)

## வாக்காளர் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்படாதவர்களுக்கான அறிவிப்பு

2020ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்படாதவர்கள், அது தொடர்பாக அறிவிப்பதற்கான சந்தர்ப்பம் நேற்று (21) முதல் நவம்பர் 17 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. குறிப்பிட்ட காலத்திற்குள் எதிர்ப்புக்களை தெரிவிக்க முடியும். மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் மற்றும் கிராம அலுவலர் அலுவலகங்களிலும் வாக்காளர் இடாப்பு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (02)



## இலங்கை ஆசிரியர்...

புலனாய்வாளர்களின் பல அச்சுறுத்தல்கள். அரசியல்வாதிகளின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் நாம் பகிஷ்கரிப்பில் ஈடுபடுகின்றோம். இலங்கை முழுவதும் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளதாக அறிய முடிகின்றது. இந்த பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்திற்கு ஒத்துழைத்த பெற்றோருக்கும் இந்த சமூகத்திற்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

25 ஆம் திகதி முதல் நாங்கள் பிள்ளைகளுக்கு கற்பிப்பதற்கும் தொடர்ச்சியான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் நாங்கள் மாற்று வியூகங்களையும் தொழிற்சங்க போராட்டங்களை தொடர்ந்து மேற்கொள்வோம்.

எந்தவிதமான எழுத்து மூலமான ஆவணங்களின்றி உங்கள் பாடசாலையின் திறப்புகளை கையளிக்கவேண்டாம். பாடசாலையின் பொறுப்பை ஒப்படைப்பது தொடர்பாக பல சுற்று நிருபங்கள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. பாடசாலை பொறுப்பை ஒப்படைப்பது ஒழுங்குவிதிகள் சட்ட நடைமுறைகள் இருக்கின்றன.

சட்டவிரோதமாக பறிமுதல் செய்தால் நீங்கள் எமக்கு முறைப்பாடு செய்யுங்கள். இதற்காக அரசாங்கத்திற்கு எதிராக நாங்கள் சட்ட நடவடிக்கை முன்கொண்டு செல்வதற்கு முனைப்பாக இருப்போம். பாடசாலைகளின் முகாமைத்துவத்தை பார்வையிடவும் மேற்பார்வையிடுவதற்குமான ஆற்றல் கல்வி அமைச்சுக்கே உண்டு.

கல்வி அமைச்சு சாராத எந்தவித ஊழியர்களுக்கோ பணியாளர்களுக்கோ பட்டதாரி பயிலுனர்களுக்கோ திறப்பை ஒப்படைப்பது என்பது மிக சட்டவிரோதமானது. இதற்காக நாங்கள் நீதிமன்றம் செல்வோம். ஆகவே. நீங்கள் அச்சப்படாமல் இலங்கை ஆசிரியர் சங்கத்திற்கு முறைப்பாட்டை வழங்க வேண்டும் என்றார்.

-யாழ். நிருபர் பிரதீபன்-

## ஓமனை வீழ்த்தி...

இதையடுத்து. 123 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஸ்கொட்லாந்து அணி களமிறங்கியது. அதிகபட்சமாக கைல் கோட்சர் ரன்கள் எடுத்தார். பெர்ரிங்டன் 31 ரன்னும். மேத்யூ கிராஸ் 26 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். இறுதியில். 17 ஓவரில் ஸ்கொட்லந்து அணி 2 விக்கெட்டுக்கு 123 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. ஆட்டநாயகன் விருது ஜோஷ் டேவிக்கு வழங்கப்பட்டது. இந்த வெற்றியின் மூலம் டி20 உலக கோப்பை தொடரின் சூப்பர் 12 சுற்றுக்கு ஸ்கொட்லாந்து அணி முன்னேறியது.

**(அப்துல் ஜெப்பார் அப்துல்லா)**

## 20 கோடி “டோஸ்“ கொரோனா தடுப்பூசி - அமெரிக்கா நன்கொடை



வெளிநாடுகளுக்கு 20 கோடி “டோஸ்“ கொரோனா தடுப்பூசியை அமெரிக்கா நன்கொடையாக வழங்கி உள்ளது. அமெரிக்காவில் கொரோனா வைரசால் 4.5 கோடிக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் 7.2 லட்சத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். இதற்கிடையே நாட்டு மக்களுக்கு தடுப்பூசியை செலுத்தும் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன. மேலும் வெளிநாடுகளுக்கும் தடுப்பூசிகள் நன்கொடையாக வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் 20 கோடி தடுப்பூசி டோஸ்களை வெளிநாடுகளுக்கு அமெரிக்கா இதுவரை நன்கொடையாக வழங்கி உள்ளது. இதன் வாயிலாக 100க்கும் மேற்பட்ட நாடுகள் பயனடைந்து உள்ளன. உலக அளவில் தடுப்பூசிகளை அதிகம் நன்கொடை அளிக்கும் நாடாக அமெரிக்கா உள்ளது.

இது குறித்து சர்வதேச வளர்ச்சிக்கான அமெரிக்க அமைப்பின் அதிகாரி சமந்தா பவர் கூறியதாவது. இந்த 20 கோடி தடுப்பூசி டோஸ்கள். லட்சக்கணக்கான மக்களின் உடல்நலத்தை பாதுகாத்துள்ளதோடு. அவர்களுக்கு நம்பிக்கையும் அளித்துள்ளன. இன்னும் நாங்கள் செய்ய வேண்டியவை நிறைய உள்ளன என அவர் கூறினார்.

இதற்கிடையே. கொரோனா தடுப்பூசி. பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள ஏழை நாடுகளுக்கு கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

## ஏற்றுமதி பயிர்களின்...

ஒரு கிலோ கிராம் மிளகின் விலை 500 ரூபாயில் இருந்து 900 ரூபாவாகவும். கருவாவின் விலை 3.400 ரூபாவாகவும். ஒரு கிலோ கராம்பின் விலை 1.400 ரூபாவாகவும். ஒரு கிலோ சாதிக்காயின் விலை 1.000 ரூபாவாகவும் உயர்ந்துள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு மாத்திரம் இதுவரையிலும். கருவா. மிளகு மற்றும் கராம்பு உள்ளிட்ட 45.000 மெட்ரிக் டொன்களுக்கும் அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

(அரசாங்க தகவல் திணைக்களம்)

## கிரே பட்டியலில்...

இதன் “கிரே“ எனப்படும் மோசமான நாடுகள் பட்டியலில் பாகிஸ்தான் கடந்த 2018லிருந்து இடம் பெற்றுள்ளது. இதனால் பாகிஸ்தானுக்கு உலக வங்கி. சர்வதேச நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் நிதி உதவி கிடைக்கவில்லை.

கடந்த 2020 ஒக்டோபரில் எப்.ஏ.டி.எப். அமைப்பின் கூட்டம் நடந்தது. அதில் பாகிஸ்தான் முக்கிய செயல்திட்டங்களை நிறைவேற்றாததால். “கிரே“ நிற பட்டியலில் தொடரும்“ என அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் 2022 ஏப்ரல் மாதம் எப்.ஏ.டி.எப்.. அமைப்பின் மாநாடு துவங்க உள்ளது. இதில் பாகிஸ்தான் தனது செயல்திட்டங்களை சரிவர நிறைவேற்றவில்லை என செய்திகள் வெளியாகியுள்ளதால். மீண்டும் “கிரே“ பட்டியலில் தொடர வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

## வாக்காளர் இடாப்பில்...

18 வயதைப் பூர்த்தி செய்த இளைஞர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்குவதற்காக. வாக்காளர் பதிவுச் சட்டமூலம் அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஒவ்வொரு நான்கு மாதங்களுக்கு ஒருமுறை. 18 வயதைப் பூர்த்தி செய்த வாக்காளர்களின் பெயர்களைக் கொண்ட முழுமையான வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பதற்கான வாய்ப்பு இதன் மூலம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விண்வெளிப் பயணத்துக்கு ரொக்கெட் - தென்கொரியாவின் சோதனை வெற்றி

விண்வெளிக்கு விண்கலங்களை ஏந்திச் செல்லும் உள்நாட்டு தொழில்நுட்பத்தில். முதல் முறையாக தென் கொரியா தயாரித்துள்ள ரொக்கெட்டின் சோதனை வெற்றிகரமாக அமைந்துள்ளது.

அமெரிக்கா. இந்தியா உட்பட ஒன்பது நாடுகள் மட்டுமே தங்கள் சொந்த உள்நாட்டு தொழில்நுட்பத்தில் ரொக்கெட்டுகளை தயாரித்துள்ளன. கடந்த 1990களில் இருந்து மற்ற நாடுகளின் ரொக்கெட் வாயிலாகவே கிழக்காசிய நாடான தென் கொரியா. தன் விண்கலங்களை அனுப்பி வந்துள்ளது. கடந்த 2013ல். ரஷ்ய தொழில்நுட்ப உதவியுடன் ரொக்கெட்டை உருவாக்கியது. ஆனால் அது தோல்வியில் முடிந்தது.

இந்நிலையில். உள்நாட்டு தொழில்நுட்பத்தின் வாயிலாக. “நூரி“ என்ற ரொக்கெட்டை தென் கொரியா தயாரித்துள்ளது. மூன்றடுக்குகள் உடைய இந்த ரொக்கெட். 154 அடி உயரம் உள்ளது. இந்த ரொக்கெட் நேற்று செலுத்தப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் அதிபர் மூன் ஜேயின் உள்ளிட்டோர் பங்கேற்றனர். திட்டமிட்டப்படி ராக்கெட் சோதனை வெற்றிகரமாக அமைந்ததாக தென் கொரியா தெரிவித்துள்ளது. மேலும் சில சோதனைகள் செய்யப்பட்டு. அதன்பின் விண்கலங்களை அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது. வரும் 2030ல் நிலவுக்கு விண்கலங்களை அனுப்பவும் தென் கொரியா திட்டமிட்டுள்ளது.

## நாட்டில் மேலும் 101 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

நாட்டில் மேலும் 101 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இவர்கள் அனைவரும் புதுவருட கொவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கமைய. நேற்றைய தினம் நாட்டில் 554 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி. நாட்டில் இதுவரை கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 533.859 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை. கொரோனா தொற்றில் இருந்து 8.790 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய. இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 502.464 ஆக அதிகரித்துள்ளது. மேலும் நாட்டில் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 13.562 ஆக அதிகரித்துள்ளது.